<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.</u>
<u>அ.வ.எண்.207/2011</u>
<u>நாள். 24.03.2026</u>

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 24.03.2026 ஆம் தேதி என்பவரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) திரு.S. ராஜீவ்காந்தி உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

==================================================================

| | |
|---|---|
| பெயர் = திருமதி. கௌரி<br>மண்டல துணை வட்டாட்சியர், புள்ளம்பாடி. | தகப்பனார் பெயர்= திரு. |
| கிராமம் = | தாலுக்கா = |
| தொழில் = | வயது = |

==================================================================

**<u>DW3 மு.வி</u>**

1) நான் புள்ளம்பாடியில் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு வந்த அழைப்பாணையில் உள்ள ஆவணத்தை கொண்டுவந்துள்ளேன். நான் திருமங்கலம் கிராமத்திற்கான பசலி ஆண்டு 1434 ற்கான அடங்கல் பதிவேட்டினை கொண்டுவந்துள்ளேன். அதில் திருமங்கலம் கிராமம் புல எண்.28/2B பதிவிற்கான உண்மை நகலையும், கொண்டுவந்துள்ளேன்.

2) **24.03.2026 தேதியிட்ட திருமங்கலம் கிராமம் புல எண்.28/2Bற்கான 1434ம் பசலிக்கான அடங்கல் பதிவேட்டின் உண்மை நகல் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் தாக்கல் செய்துள்ள அ.சா.ஆ.1 அடங்கல் கணக்கிற்கான மற்றொரு உண்மை நகலை வழங்கிய மண்டல துணை வட்டாட்சியர் யார் என்றால் தெரியாது, அதில் உள்ள புள்ளம்பாடி மண்டல துணை வட்டாட்சியர் என்பதற்கு

மேலாக உள்ள கையொப்பத்தை வைத்து என்னால் அடையாளம் காண முடியவில்லை.

3) எனக்கு முன்பு புள்ளம்பாடியில் மண்டல துணை வட்டாட்சியராக இருந்தவர் யார் என்றால் 17.11.2025 ல் நான் பொறுப்பு எடுத்துக்கொண்டேன், அதற்கு முன்பு 10 நாட்கள் மட்டும் திரு. கணேசன் என்பவர் பொறுப்பில் இருந்தார், அதற்கு முன்பு திரு. லோபோ என்பவர் பொறுப்பில் இருந்தார். நான் தாக்கல் செய்துள்ள அ.சா.ஆ.1 யை தொடர்புடைய கிராம நிர்வாக அலுவலர் விசாரணையின் பேரில் தெரிந்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

<u>குறுக்கு விசாரணை</u>

1) நான் கொண்டுவந்துள்ள திருமங்கலம் கிராமம் அசல் அடங்கல் பதிவேட்டின்படி அதன் நகலை தான் அ.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.1ல் புல எண்.28/2Bற்கு பாவாயி என்பவர் பெயர் மட்டுமே கண்டுள்ளது என்றாலும், வேறு எவருடைய பெயரும் காட்டப்படவில்லை என்றாலும் சரிதான்.

2) நான் மேற்படி புல எண்ணிற்கு முந்தைய பசலி ஆண்டுகளுக்கான அடங்கல் பதிவேடுகள் எங்கள் கைவசம் உள்ளது என்றால் சரிதான். வருவாய் துறை ஆணைகளை பொறுத்த வரை பொதுவாக ஒரு சாகுபடி அடங்கலில் ஒரு நபரது பெயர் பதிவு செய்யப்படவேண்டுமெனில் அவர் உரிமையாளராகவோ, அல்லது சாகுபடி குத்தகைதாரராக பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட நபராகவோ இருந்தால் மட்டுமே பதிவு செய்ய முடியும் என்றால் சரிதான்.

3) ஒரு பகுதியில் உள்ள கிராமத்தை பொறுத்து அதே பகுதியை

சேர்ந்த வட்டாட்சியரோ, துணை வட்டாட்சியரோ மட்டுமே சாகுபடி அடங்கல் வழங்க முடியும் என்றால் தொடர்புடைய வட்டாட்சியரோ, துணை வட்டாட்சியரோ விடுப்பில் இருந்தால் பொறுப்பில் உள்ள வட்டாட்சியரோ, துணை வட்டாட்சியரோ சாகுபடி அடங்கல் வழங்குவார், அதுபோல கிராம நிர்வாக அலுவலர் விடுப்பில் இருந்தாலும், பொறுப்பில் உள்ள கிராம நிர்வாக அலுவலர் சாகுபடி அடங்கல் வழங்குவார்.